முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1599

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.02.2024,** புதன்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
தானதர்மத்தின் வடிவாகவே வந்த
தனிப்பெரும் கருணைமிகு குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
வரமென சோபகிருது சாலின் திங்கள்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 02 ம் நாள், 14.02.2024, புதன்கிழமை)
வழங்குவேன் அரங்கனுக்கு சக்தி இன்னும் பெருக
3. பெருகவே அரங்கனோடு ஆறுமுகன் யான்
பிரணவ சக்தியாக அருளிவர
அருளிவர அரங்கன் குடில் நோக்கி அகிலத்தார் தீட்சை ஏற்று வந்தால்
இருள் விலகும் ஞானபலம் கூடும் இனி பிறவா பேற்றுக்குண்டான
உயர்கதி கிட்டும்
4. ஞான பலம் தந்து ஞானிகளை படைப்பேன் என
ஞாலமதில் மாதவத்தை இந்த கலியுகத்தில்
ஞான சக்தியாக அவதார நோக்கத்தின் வடிவாக
ஞானபண்டிதன் என் சூட்சுமமாக வந்த ஞானி அரங்கனை
5. அரங்கனை தொழுதிட அரங்கன் தர்மத்தை வளர்த்திட
வரங்களாக வரும் மக்களுக்கு
எல்லா சித்திகளும் கிட்டி வையகத்தில்
ஞானிகளாகும் வாய்ப்பும் உறுதியாகும்
6. ஆகவே அரங்கன் தர்மமும் சைவமும் ஆற்றல்மிக்க ஜீவகாருண்யமும்
தழைத்தால் போதும் அகிலமே ஞான லோகமாகும்
வகைபட ஞான ஆட்சி தனையும் அடையும்
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—